# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 221 /பேரூ/2025**
**நாள் : 30.03.2026**

M.S. சேஷாத்ரி,
ஆரணி,
திருவள்ளூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆரணி முதல்நிலை பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம். - எதிர் மனுதாரர்

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஆரணி, 366, பஜார் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. M.S. சேஷாத்ரி என்பவரது 21.06.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.06.2025 அன்று பெறப்பட்டு, 221/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஆரணி, 366, பஜார் தெரு என்ற முகவரியில் வசிக்கும் மனுதாரர் திரு. M.S. சேஷாத்ரி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 21.06.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

முறைமன்ற நடுவர் அவர்களுக்கு வணக்கம். ஆரணி பேரூராட்சியில் G.N. செட்டி தெருவில் ரூ.4,10,000 மதிப்பீட்டில் சென்ற வருடம் சாலை சீரமைக்கப்பட்டது. அந்த சாலை அமைக்கப்பட்ட பத்தே நாட்களில் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. செயல் அலுவலருக்கு புகார் மனு 16.05.2024 அன்று வழங்கினேன். அந்த மனுவில் எந்த தீர்வும் காணப்படாத நிலையில் 10.01.2025, 27.02.2025, 04.02.2025 மற்றும் 09.04.2025 ஆகிய நான்கு நினைவூட்டல் கடிதம் வழங்கியும் எந்த பயனும் இல்லை என்று மீண்டும் மாவட்ட ஆட்சியரின் குறைதீர் நாளில் 12.05.2025 அன்று புகார் மனு அளித்தேன். என்னுடைய புகார் மனுவின் எண். 11624314 ஆகும். இருந்தும் இதுவரையில் என்னுடைய புகார் மனுக்களின் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் வழங்கிய மனுக்கள் அத்தனையும் இந்த மனுவுடன் இணைத்துள்ளேன். எனவே, உரிய

அதிகாரி மற்றும் ஒப்பந்ததாரரின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 27.06.2025 நாளிட்ட அறிவிப்பின் மூலம் ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் செயல் அலுவலரிடமிருந்து அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு இம்முறைமன்றத்தில் 06.03.2026 அன்று நடைபெறவிருக்கும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் மற்றும் விரிவான அறிக்கையுடன் ஆஜராகுமாறு 25.02.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரரான திரு. M.S. சேஷாத்ரி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 06.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- " திருவள்ளூர் மாவட்டம், ஆரணி முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட G.N. செட்டி தெருவில் 2024ஆம் ஆண்டில் பொதுநிதி திட்டத்தின் கீழ் ரூ.4.10 இலட்சம் மதிப்பீட்டில் தரமற்ற சாலையினை சீரமைக்கப்பட்டதால், சாலை அமைக்கப்பட்ட 10 நாட்களுக்குள் சாலை சீர்குலைந்து விட்டு, சாலை இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. எனவே குறிப்பிட்ட ஒப்பந்ததாரரிடமிருந்து பொது நிதியின் மூலமாக வழங்கப்பட்ட 4.10 இலட்சம் ரூபாயை பேரூராட்சியால் திரும்ப பெற்றுக்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

- இது குறித்து ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியருக்கு பல்வேறு புகார் மனுக்கள் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

- எனவே தரமற்ற சாலை அமைத்தது குறித்து எவ்வித நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருக்கும் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் தரமற்ற சாலை அமைத்த ஒப்பந்ததாரர் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுத்து தீர்வு காண்பதற்கு ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'" என தெரிவித்துள்ளார்.

5. எதிர்மனுதாரரான ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் 06.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- "திருவள்ளூர் மாவட்டம், ஆரணி முதல்நிலை பேரூராட்சியில் 2023–24ஆம் ஆண்டில் வடகிழக்கு பருவ மழை பெய்ததன் விளைவாக பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1, 4, 9 உள்ளடக்கிய G.N. செட்டித் தெருவில் மேடு பள்ளம் ஏற்பட்டதை சீரமைப்பு செய்வதற்கு 2023-24ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் ரூ.4.10 இலட்சம் மதிப்பீட்டில் சாலை பழுது நீக்கம் செய்யும் பணி பேட்ச் ஒர்க் மூலம் மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட சாலை மாநில

நெடுஞ்சாலை அளவிற்கு கட்டி முடிக்கப்படாததாலும், கனரக வாகனங்கள் அந்த சாலையில் அதிகம் சென்றதாலும் 10 நாட்களிலேயே பழுதடைந்துவிட்டது.

- ஆனால் மேற்காணும் சாலையில் கனரக வாகனங்கள் அதிக அளவில் சென்று வருவதால் மீண்டும் சாலையானது குண்டும் குழியுமாக பழுதாகியதால், மறுபடியும் 2025-26ஆம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் ரூ.5.40 இலட்சம் மதிப்பீட்டில் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மீண்டும் பொது நிதியை பயன்படுத்தி மேற்கண்ட சாலை சீரமைப்பு செய்யப்பட்டாலும் முன்னர் கூறிய காரணத்தினால் மீண்டும் பழுதடைந்துவிட்டது.

- மேற்காணும் பழுதுநீக்கம் பணிகள் மேற்கொண்டாலும் தொடர்ந்து மீண்டும் மீண்டும் சாலையானது பழுதடைந்து வருவதால் நிரந்திர தீர்வு காணும் பொருட்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.118 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, சாலை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாததால், மேற்படி சாலை மேலும் சிதலமடைய உள்ளது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் 06.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையின்போது மனுதாரரின் புகார் மனுவில் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு தனது 02.03.2026 நாளிட்ட ந.க. எண். 57/2026/அ1ல் தனது விளக்கத்தை கீழ்க்கண்டவாறு அளித்துள்ளார்.

“திருவள்ளூர் மாவட்டம், ஆரணி பேரூராட்சியில் 2023-2024ஆம் ஆண்டு வடகிழக்கு பருவ மழை காரணமாக சாலையில் ஆங்காங்கே ஏற்பட்ட குண்டும் குழியுமாக உள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்ய பொது நிதியின் கீழ் வார்டு எண். 1,4,9 பகுதிகளில் உள்ளடக்கிய ஜி.என். செட்டித் தெருவில் ரூ.4,10,000/- மதிப்பீட்டில் பழுது நீக்கம் செய்யும் பணி செய்து முடிக்கப்பட்டது. இச்சாலையை பயன்படுத்தி அதிக அளவில் கனரக வாகனங்கள் சென்று வருகின்றன. இதன் காரணமாக இச்சாலையில் பழுது ஏற்படுகிறது. மேலும், இச்சாலையானது 0.852 கி.மீ. நீளமும் 6.00 மீட்டர் அகலமும் கொண்ட பிரதான சாலையாகும். இச்சாலை முழுவதும் புனரமைக்க சுமார் ரூ.2.00 கோடி செலவாகும். போதிய நிதி இப்பேரூராட்சி கையிருப்பில் இல்லாததால் பொது மக்களின் போக்குவரத்து நலன் கருதி ஆங்காங்கே சிறுசிறு பழுதுகள் ரூ.4,10,000/- மதிப்பீட்டில் பணிகள் செய்து முடிக்கப்பட்டது. மேலும், இச்சாலை 2023-2024ஆம் நிதியாண்டில் பொது நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் பெய்த பருவ மழை காரணமாகவும், கனரக வாகனங்கள் போக்குவரத்து காரணமாகவும், சிறிய அளவில் பழுதுகள் ஏற்பட்டது. மேலும், இச்சாலைக்கு நிரந்தர தீர்வாக தற்போது தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.118.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் தேர்வு செய்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி உத்தரவு வழங்கப்பட்டு, தற்போது பணி துவங்கும் நிலையில் உள்ளது. புகார் மனுவில் தெரிவித்துள்ள ஜி.என். செட்டித் தெருவில் ரூ.4.10 இலட்சம் மதிப்பீட்டில் பழுது பார்க்கும் பணியானது சிமெண்ட் கான்கிரீட் பேட்ச் ஒர்க் மூலம் பணி செய்து முடிக்கப்பட்டு பொறியாளர் அவர்களால் அளவுகள் மற்றும் மேலளவுகள் எடுக்கப்பட்டு பட்டியல் தொகை அளிக்கப்பட்டுள்ளது. இதில் எவ்வித தவறும் நிகழவில்லை என அறிக்கை பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

7. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

திருவள்ளூர் மாவட்டம், ஆரணி இடத்தை சார்ந்த மனுதாரர் திரு. M.S. சேஷாத்ரி என்பவர் தனது 21.06.2025 நாளிட்ட மனுவில் திருவள்ளூர் மாவட்டம், ஆரணி முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட G.N. செட்டி தெருவில் கடந்த 2024 பிப்ரவரியில் ரூ.4.10 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சாலை சீரமைக்கும் பணி முடிந்த 10 நாட்களில் சாலை இருக்கும் இடம் தெரியாமல் குண்டும் குழியுமாக உள்ளது எனவும், இவ்வாறு முறைகேடாக நடைபெற்ற சாலை பணிக்கு ஒப்பந்ததாரருக்கு காசோலையும் வழங்கப்பட்டுள்ளது எனவும் புகாராக தெரிவித்து, இது குறித்து பேரூராட்சியில் பலமுறை புகார் மனுக்கள் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிவித்து ஒப்பந்ததாரர் மற்றும் உரிய அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு கோரியிருப்பது அறிய முடிகிறது.

2023-24ஆம் ஆண்டில் வடகிழக்கு பருவமழை பெய்ததன் காரணமாக வார்டு எண். 1,4,9 உள்ளடக்கிய G.N. செட்டித் தெருவில் மேடு பள்ளம் ஏற்பட்டு சாலை பழுதடைந்ததால் 2023-24ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் ரூ.4.10 இலட்சம் மதிப்பீட்டில் சாலை பழுது நீக்கம் செய்யப்பட்டாலும், கனரக வாகனங்கள் செல்வதால் அச்சாலை மீண்டும் பழுதடைந்தது என்பதையும் எனவே 2025-26ஆம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் ரூ.5.40 இலட்சம் மதிப்பீட்டில் மீண்டும் சாலை சீரமைக்கப்பட்டது எனவும், இருப்பினும் இச்சாலையானது மீண்டும் மீண்டும் பழுதடைவதால் நிரந்தர தீர்வு காணும் பொருட்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.118 இலட்சம் மதிப்பீட்டில் சாலை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும், ஆனால் போதிய நிதி ஒதுக்கீடு இல்லாததால் மேற்படி சாலையானது மேலும் சிதலமடைய உள்ளது என தெரிவித்திருப்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

இந்நிலையில், (1) 2023-24ஆம் ஆண்டு பொதுநிதியின் கீழ் G.N. செட்டித் தெருவில் ரூ.4.10 இலட்சம் மதிப்பீட்டில் பழுதடைந்த சாலையினை பழுதுநீக்கம் செய்யப்பட்ட பணியிலும்;

(2) இதே G.N. செட்டித் தெருவில் மீண்டும் 2025-26ஆம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் ரூ.5.40 இலட்சம் மதிப்பீட்டில் மீண்டும் பழுதுநீக்கம் செய்யப்பட்ட பணியிலும் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படவில்லை என்பதை உறுதி செய்திடும் பொருட்டும்; மற்றும்

3. தற்போது G.N. செட்டித் தெருவில் நிரந்தர தீர்வு காணும் வகையில் ரூ.118 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகள் முறையாக நடைபெற்று வருகிறது என்பதையும் உறுதி செய்திடும் பொருட்டு ஒரு உயர்மட்ட தொழில்நுட்ப குழுவை அமைத்து, அக்குழு மூலம் நிர்வாக அனுமதி, தொழில்நுட்ப அனுமதியளிக்கப்பட்ட ஆவணங்களின்படி பணிகள் முறையாக மேற்கொள்ளப்படுகிறதா என்பதை கள ஆய்வு செய்து அதன் அறிக்கையை விரைவில் பெற்று அவ்வறிக்கையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு மார்ச் 30-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. M.S. சேஷாத்ரி,
எண். 366, பஜார் தெரு,
பொன்னேரி வட்டம், ஆரணி
திருவள்ளூர் மாவட்டம் 601 101.

2. செயல் அலுவலர்,
ஆரணி முதல்நிலை பேரூராட்சி,
திருள்ளூர் மாவட்டம் - 601 101.

3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

2/4/26
செயலாளர்
02/4/26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் ☆ சென்னை–600 032 ☆